2. தகவல் கோரல்

தென்பெண்ணையாற்றின் குறுக்கே கர்நாடக அரசு தடுப்பணை கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோபிநாத், என்ன சொல்லுங்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஒசூரில் கெலவரப்பள்ளி அணை இருக்கிறது. அதற்கு கர்நாடக மாநிலத்திலிருந்து 365 நாட்களும் round the clock தண்ணீர் வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. அந்த அணை பற்றி சொல்ல வேண்டுமென்றால் அது ஒரு பெரிய வரலாறு. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் உருவாக்கப்பட்ட அணை அது. This is a very important issue.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நேரம் இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பிரச்சினையை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிடுங்கள். அதன் வரலாறு பற்றியெல்லாம் அமைச்சர் சொல்வார். வரலாறு எல்லோருக்கும் தெரியும். நீங்கள் நேரத்தை வீணடிக்கிறீர்கள்.

திரு. கே. கோபிநாத்: இப்போது நிலைமை என்னவென்றால், கர்நாடக மாநிலத்தில் மதவளபள்ளி என்ற village-லே முகளூர் பஞ்சாயத்தில் சஜ்ஜாபுரி யூனியனில் ஆணைக்கல் தாலுகாவில் ஏற்கெனவே ஒரு check dam கட்டி, அந்த check dam மூலமாக கர்நாடகாவில் இருக்கிற கோலார், மாலூர் பகுதிக்குத் தண்ணீரை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதற்கு மேலாக, கூடுதலாக இன்னொரு check dam, மதுர்பள்ளி கிராமத்தில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அணையைப் பார்வையிடுவதற்கு யாரையுமே அனுமதிக்கவில்லை. தமிழகத்தின் சார்பில் யாரையும் பார்க்க அனுமதிக்கவில்லை. இருந்தாலும்கூட யாருக்கும் தெரியாமல், அங்கு இருக்கிற எனது காங்கிரஸ் கட்சி உறுப்பினருடன் சென்று நான் கைப்பேசியில் போட்டோ எடுத்து, போட்டோவை உங்களிடம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி அமருங்கள்.

திரு. கே. கோபிநாத்: இது எப்படியென்றால், அங்கிருந்து வரக்கூடிய தண்ணீர் மட்டும் குறைந்துவிட்டது என்றால், என்னுடைய தொகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்படும். இந்த அணைக்கு கர்நாடகாவின் நந்திதுர்க்கத்திலிருந்து தண்ணீர் வருகிறது. அங்கிருந்து வரும்போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக, கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி அமருங்கள்.

திரு. கே. கோபிநாத்: நீர் நந்திதுர்க்கத்திலிருந்து ஓசக்கோட்டை வருகிறது. ஏற்கெனவே ஓசக்கோட்டையில் அணை கட்டியதால் இது மாலூர்–கோலாருக்குச் சென்றுவிட்டது. இப்போது கொடியாலம், கெலவரப்பள்ளி, கிருஷ்ணகிரி, சாத்தனூர், கடலூர் போன்ற இடங்களுக்கு, கிட்டத்தட்ட நான்கு மாவட்டங்களுக்குத் தண்ணீர் இனிமேல் வருவதற்கு வாய்ப்பில்லாமல் அவர்கள் அணையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, முழு விவரத்தைச் சமர்ப்பித்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடமும் கொடுத்திருக்கிறேன். இதுகுறித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து உட்காருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஜீவாதார நதியாக தென்பெண்ணையாறு திகழ்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே கொடியாலம் அணை, கெலவரப்பள்ளி அணை, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணை போன்ற அணைகள் வாயிலாக 36 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறுவதோடு, அவை நிலத்தடி நீர் மற்றும் குடிநீர் ஆதாரமாகத் திகழ்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களுடைய பாசன வசதி மற்றும் குடிநீர் ஆதாரமாக அவை திகழ்கின்றன. தென்பெண்ணையாறு என்பது கர்நாடக மாநிலம், நந்திமலையிலே தோன்றி ஓசக்கோட்டை வழியாக பெங்களூரு வரத்தூர் ஏரி வழியாக தமிழகத்தில் கொடியாலம் பகுதியிலே வருகிறது. ஆகவே, கர்நாடக அரசு அதாவது கர்நாடகப் பகுதியிலே தமிழக எல்லையிலே அந்த நீரை வரவிடாமல் வரத்தூர்

2012 ஏப்ரல் 12] [திரு. டி. இராமச்சந்திரன்]

ஏரியிலே தடுத்து நிறுத்தி, மாலூர் வட்டத்தில் உள்ள 160–க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு நீர் எடுப்பதற்காக கர்நாடக அரசு முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு தமிழகத்திற்கு அந்தத் தண்ணீர் வரவில்லையென்றால் கிருஷ்ணகிரி மாவட்டம் பாலைவனமாக மாறிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமச்சந்திரன், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி அமருங்கள்.

முற்பகல் 11–00

திரு. டி. இராமச்சந்திரன்: ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதிகாரிகள் மட்டத்தில் ஒரு குழு அமைத்து உண்மை நிலவரத்தைக் கண்டறிந்து, இன்றைக்கு கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைப் போக்க வேண்டும். ஏற்கெனவே தமிழகம் அண்டை மாநிலங்களால், காவிரி, முல்லைப்பெரியாறு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவையின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: பாலாறு உட்பட நதி நீர்ப் பிரச்சினையில் நாம் வஞ்சிக்கப்பட்ட நிலையில், மத்திய அரசோடு தமிழக அரசு பேசி தென்பெண்ணையாற்றினுடைய நீரைப் பெற வேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் போன்ற 5 மாவட்டங்களுக்கு பெரும் நீராதாரமாக விளங்கிக் கொண்டிருக்கும் தென்பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக கர்நாடக அரசு 36 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக, கர்நாடக சட்டமன்றத்திலே அறிவித்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இந்தத் தடுப்பணை கட்டப்பட்டால், குறிப்பாக திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டத்தில் பெரும் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும். மேலும் ஐந்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தென்பெண்ணையாற்றினுடைய நீரை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

[திரு. அ. கணேஷ்குமார்] [2012 ஏப்ரல் 12

எனவே, இதனைத் தடுத்து நிறுத்த தமிழக அரசு நடுவண் அரசை நிர்ப்பந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நதி நீர் ஆணையம்மூலம் பாதுகாக்க வேண்டிய நதிகளில் ஒன்றான தென்பெண்ணையாறு, குறிப்பாக தமிழகத்திலுள்ள கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களுடைய ஜீவாதார நதி. பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நம்பி வாழக்கூடிய அப்பேர்ப்பட்ட நதிக்கு வரத்தான நீர், நந்தி மலையிலிருந்து மடிவாலம் வழியாக வரத்தூர் ஏரிக்கு வருகின்ற இடத்தில், கர்நாடக அரசு கடந்த இருபது தினங்களுக்கு முன்பாக, அணை கட்ட 32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாக, அங்கு வெளியாகக்கூடிய 'கர்நாடகா பிரபா' பத்திரிகையிலும்,* 'The New Indian Express' *பத்திரிகையிலும் பல்வேறான செய்திகள் அங்கு வெளி வந்துக்கொண்டிருக்கின்றன. அங்கு தடுப்பணையைக் கட்டி நமக்கு வரவேண்டிய வரத்து நீரை கர்நாடக எல்லைக்குள்ளே பல கிராமங்களுக்கு எடுத்துச் செல்கின்ற நிலையை ஏற்படுத்துகின்றபட்சத்தில் நிச்சயமாக அது ஒரு பெரிய பாதிப்பை தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்கு ஏற்படுத்தும். ஆகவே, தமிழக அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடனடியாகத் தடுப்பணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதுடன், இந்த ஏழை விவசாயிகளை, ஐந்து மாவட்டங்களுடைய ஜீவ நாடியான நீரைப் பாதுகாப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் போன்ற ஐந்து மாவட்டங்களுடைய ஜீவாதாரமாக விளங்கக்கூடிய தென்பெண்ணையாற்றின் குறுக்கே கர்நாடக அரசு அணை கட்டுவதால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய*

2012 ஏப்ரல் 12] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பாதிப்பு குறித்து தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணையாறு ஒரு பன்மாநில நதியாகும். அந்த நதி கர்நாடக மாநிலம் நந்தி மலைத் தொடரில் உற்பத்தியாகி, ஓசக்கோட்டை மற்றும் வரத்தூர் வழியாக ஓடி, தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் அருகேயுள்ள கொடியாலம் அணையை வந்தடைகிறது. இந்த அணை கர்நாடக—தமிழ்நாடு எல்லையிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அதைத் தொடர்ந்து, அந்த நதி தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் வழியாக ஓடி கடலூரில் கடலிலே சேருகிறது. தென்பெண்ணையாற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி, கிருஷ்ணகிரி மற்றும் சாத்தூர் அணைகள் தமிழக அரசால் கட்டப்பட்டுள்ளன.

தென்பெண்ணையாற்றின் மொத்த நீர்ப்பிடிப்புப் பரப்பு 14,449 சதுர கிலோ மீட்டராகும். இதில் கர்நாடகத்தில் 3,545 சதுர கிலோ மீட்டரும், ஆந்திரப் பிரதேசத்தில் 133 சதுர கிலோ மீட்டரும், தமிழ்நாட்டிலே 10,477 சதுர கிலோ மீட்டரும் மற்றும் புதுச்சேரியிலே 794 சதுர கிலோ மீட்டரும் உள்ளன. கோலார் மாவட்டத்திலுள்ள மாலூர் வட்டத்தில் பெரும் பகுதி தென்பெண்ணையாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ளது. இப்பகுதியில் சுமார் 3,000 ஏரிகள் உள்ளன. மாலூர் வட்டத்திலுள்ள 160 ஏரிகள் இதில் அடங்கும். தென்பெண்ணையாறு 1892 ஆம் ஆண்டு தமிழ்நாடு—மைசூர் மாகாணங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தில், அட்டவணையில் 9—வது இனமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் மைசூர் அரசு, சென்னை—தமிழக அரசுடைய முன்னனுமதி பெறாமல் எந்தப் புதிய நீர்த்தேக்கமும், அணையும் கட்டக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது ஏதாவது புதிய அணை கட்ட விரும்பினால், அது பற்றிய முழு விவரங்களையும் தமிழக அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற தகவல், சென்ற மாதம் கர்நாடக அரசுக்குக் கடிதம் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு தமிழகத்தினுடைய நலனையும், உரிமையையும் விட்டுக்கொடுப்பதில்லை. அதில் எந்தவித சமரசமும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்திக்கொள்ள மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அரசு இதை உன்னிப்பாகக் கவனித்து மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை தலைமைச் செயலாளர் வாயிலாக அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு விரைவிலே ஒரு குழு அமைத்து கண்காணிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

புதுக்கோட்டை நகராட்சி நூற்றாண்டு விழாவையொட்டி சிறப்பு உதவித் தொகை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே விரைந்து நகர்மயம் ஆகி வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. நகரங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் வலு சேர்க்கும் இயந்திரங்கள் ஆகும். அதே நேரத்தில், நகர்ப்புறங்களில் மக்கள் தொகை பெருகி வருவதன் காரணமாக, அடிப்படை வசதிகளின் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இதனை நிறைவு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், சென்னை மற்றும் அதனைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளுக்காக “சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்” மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள்,